அருட்பணியாளரின் ஜெபத்தேவைகள்

ஊழியனின் தனிபட்ட போராட்டத்தைக் கேட்டறிந்தோரும் கண்டு உணர்ந்தோரும் மிகச் சிலரே. கொஞ்சம் விளக்கமாக உங்களோடு மனம் விட்டு பகிர்ந்து கொள்ள வாஞ்சிக்கிறேன்.

முதலாவது தனக்குள் இருக்கும் ஆத்தும பாரத்தினையும் ஆண்டவரின் பேரில் உள்ள அன்பின் பிரவாகத்தையும், ஜெப பீடத்தில் உள்ள அக்கினியையும், தொடர்ந்து காத்துக்கொள்வதற்கு தொடர்ச்சியான எழுப்புதல் கூட்டங்களோ, ஐக்கிய அமைப்புகளோ, இல்லாத இடத்தில் தள்ளப்படும் இந்த முன்னனி ஊழியன் ஆவிக்குரிய போராட்டத்தில் போர் முனையில் அடிக்கடி தாக்கப்படுகிறான். இதை எதிர்த்து நிற்பதற்கு பலனற்றவேளை அவனுக்கு உண்டாகலாம் அழைப்பைக் குறித்த சந்தேகம் அடிக்கடி வந்து போகலாம். பண்டிகை நாட்களில் அநேகரோடு ஆலயத்திற்குப் போய் வருவேனே என்று அங்கலாய்க்கலாம். தமக்குள் இருக்கும் அக்கினியை தக்க வைத்துக் கொள்ள பாடுபடும் நேரத்தில் குளிர்ந்து போன மற்றவரையும் சந்திக்க நேரிடலாம். இது இன்னமும் அவரைக் குளிர்ந்து போகச் செய்யலாம்.

இரண்டாவதாக இன்றைய சூழ்நிலையில் எழும்பி வரும் உபத்திரவங்களும் பாடுகளும் உள்ளான பயத்தை உண்டாக்கி செயலற்றுப் போகச் செய்துவிடலாம். அல்லது ஏதோ எந்திரம் போல் தம்பணியைச் செய்பவராக மாற்றிவிடலாம். தன்னுடைய பணித்தளத்திலேயே சிலருக்குப் போராட்டம் உண்டு மற்றவர்களுக்கோ மற்ற இடங்களில் நடக்கும் செய்திகள் கலக்கத்தை உண்டு பண்ணி செயல் திறனைக் குறைத்துவிடலாம். ஆதரவு தருவதற்கு அருகில் ஆட்கள் இல்லையே என்கிற ஏக்கம் அலைமோதச் செய்யலாம். இந்த நிலையில் மிஷனரிச் சங்கங்களும் அதன் தலைவர்களும் தன்னை புரிந்து கொள்வார்களோ? மாட்டார்களோ? என்ற சந்தேகம் தாக்கலாம். தனக்கு ஏதாவது ஏற்பட்டுவிட்டால் தகவல் அறிவிப்போரும் இல்லாமல் போய்விடுமோ என்ற பயம் பயங்கரக் கனவுகளை உருவாக்கி சிந்தையை சிதைத்துவிடலாம்.

மூன்றாவதாக, பணித்தளத்தின் வசதியற்ற நிலைமைகள் உணவுப் பழக்கங்கள், விரும்பி தருவோரின் உணவு வகைகள் வேண்டாம், முடியாது என்று சொல்ல முடியாத சூழ்நிலைகள் சாப்பிட நேரமின்மைம அல்லது சமயம் தவறுதுல் போன்ற சூழ்நிலைகளால்த உண்டாதும் பெலவீனங்களை வியாதிகள் பலரை உருக்குலைத்துவிட்டது. அநேதருக்கு சுகாதாரப் பிரச்சினையும் உண்டு. பஸ் ஒன்றில் பிரயாணம் பண்ணினேன். குளிர் காலம் அது. வீட்டிற்கு வந்து பார்த்தால் போட்டிருந்த கம்பளி ஆடையில் அத்தனை சேலைப்பேன்களும், முட்டைகளும், அந்த ஆடையை எரிப்பதைவிட வேறுவழி இல்லாமல் போய்விட்டது. யானைக் கால் வியாதியை உண்டாக்கும் கொசுவிற்கும் மலேரியா, மஞ்சள் காமாலை, ஷயரோகம் ஆகியவற்றோடு மல்யுத்தம் செய்து தடுத்து நிறுத்தக் கூடிய சூழ்நிலைகளும் தெய்வீகப் பாதுகாப்பே அன்றி மறந்தும் சில வினாடிகள் வாழக் கூடாத சூழ்நிலைகள். இதன் மத்தியில் வாழும் அந்த தேவச செய்தியாளன் எத்தனைதான் முன் எச்சரிக்கையாய் இருக்க முடியும்.

நான்காவதாக, தான் வீட்டு வந்திருக்கும்த பெற்றோர் வயோதிப காலத்தின் வேததனைகளை வெளிக்காட்டி எழுதும் கடிதங்கள் அடிக்கடி அவனை நிலை குலையச் செய்யலாம். இத்தனை பெரிய விலைக்கிரயமா மிஷனரிப் பணிக்குச் சொலுத்த வேண்டும் என அவன் அடி எடுத்து வைக்கும்போது யோசிக்கவில்லை. உடன் பிறந்தோர் இருந்தால் அவர்களின் அன்புத்தொல்லைகள், உன் பணத்தை நாங்கள் எதிர் பார்க்கவில்லை. எங்கள் வீட்டு வைபவங்களிலாவது கலந்து கொள்ளக் கூடாதா? உடன்பிறந்தவன் என்று இதிலேயாகிலும் ஊர் அறியச் செய்யக் கூடாதா? என்ற கேள்விக் கணைகள். அடிக்கடி ஊர் செல்லக் கூடாத நிலைமை,

பணித்தளத்தின் தேவைகள், பிரயாணத்தில் விரயமாகும் பணங்கள், நாட்கள் மலையைப் போல் அவனுக்கு அடையாளமும் முன்பாக நிற்கின்றன. அநேக உறவினரை அவனுக்கு அடையாளமும் தெரிவதில்லை. சில நாட்களில் தன் சொந்தக் குடும்பத்திலேயே அந்நியனாகக் கருதப்படும் இந்த மிஷனரியின் நிலைமை பரிதாபம். சில வேளைகளில்த வியாதிப்பட்ட பெற்றோரைப் பார்க்க வீடு போய் சேருவதற்குள் அவர்கள் உலகத்தை விட்டே போயிருப்பார். இதனால் உண்டாகும் போராட்டத்திற்கு அளவே கிடையாது.

ஐந்தாவதாக, காணிக்கைகளால் தாங்கப்படும் தன்னுடைய மிஷனரி ஸ்தாபனம் ஒரு வேளை ஏதோ, ஒரு காரணத்தினால் தாங்குவோர் குறைந்து போய் விட்டால் தன்னைத் தாங்கும் சக்தியை இழந்து விடுமோ? தன் தேவையை சந்திக்கும் திறனை இழந்து விடுமோ? என்ற கவலை ஒரு பக்கம் அழுத்தலாம். பெலம்ம இருக்கும் போது என்னை உபயோகப்படத்தும் இந்த மிஷனரி ஸ்தாபனம் பெலவீனப்பட்டு விட்டால் என்னைத் தொடர்ந்து தாங்குமோ? அப்படி நேரிட்டால் என்னுடைய எதிர்காலம் என்ன ஆவது? என்ற பதில் தெரியாத கேள்வி. என்னுடைய அந்நிய காலத்தில் எனக்கு பாதுகாப்பு கொடுகத்குமா? அல்லது கைவிட்டு விடுமோ? இன்றைய தலைமைத்துவம் தரும் ஆதரவு என்னை அறிய தலைமைத்துவம் வரும் போதும் கிடைக்குமா? என்ற கேள்விகள் நீதிமான் கைவிடப்பட்டதையும், அவன் சந்ததி அப்பத்துக்கு கையேந்தி நிற்பதையும் நான் காணவில்லை என்ற தாவீதின் சவால் மிகு வார்த்தைகள் அவ்வப்போது தோன்றினாலும் விசுவாசத்தை திடப்படுத்தினாலும் இடை இடையே உருவாகும் விசுவாசக் குறைச்சல் நமைச்சலை உண்டாக்காமல் இல்லை. கூடவே தொடர் நோயாளியாய் இருந்து விட்டால் தனித்து விடப்பட்டு விடுவோமோ என்கிற பீதியும் பிசாசினால் அடிக்கடி எறியப்படும் எதிர்ப்பாயுதமே.

ஆறாவதாக, திருமணமாகாதோர் தங்களின் தரிசனத்துக்கேற்ற துணை கிடைப்பாரோ? அல்லது திருமணத்திமித்தம் ஊழியத்தை விட்டுவிட வேண்டியது இருக்குமோ? தியாகம் செய்ய முன்வராவிட்டால் எனக்குத் திருமணமே நடக்காமல் போய்விடுமோ? என்ற சந்தேகம் கேள்விகள் அவர்களை ஆட்டிப் படைக்கலாம். பெண் மிஷனரிகளுக்கோ இந்தக் காரியத்தில் போராட்டம் அதிகம் கூடவே அவர்களின் முழு பெலத்தையும் எடுத்துவிட போதுமான சக்தி படைத்தாய் ஆகி விடுகிறது. திருமணம் செய்யாமலேயே ஊழியத்தில் இருந்து விடலாம் என்றால் பணித்தளத் தேவைகள் அதற்கும் இடம் தருவதில்லை. சிலருக்கோ இதனால் தங்குமிடமே பிரச்சனை ஆகிவிடுகிறது.

ஏழாவதாக, பிள்ளைகளிருப்போர் பிள்ளைகளின் எதிர்காலத்தை தீர்மானிக்க, நல்ல கல்வி சாலைகளுக்கு அனுப்ப இயலாத நிலை. அப்படியே சிறிய வகுப்புகளில் அனுப்பும் வாய்ப்பு ஏற்பட்டாலும், உயர்கல்வி என்பது குதிரைக் கொம்பாகி விடுகிறது. வருமானத்தின் அளவை வைத்தப் பார்த்தால் தங்கள் பிள்ளைகளை படிக்கவே வைக்க முடியாதோ என்ற சூழ்நிலை. கூடவே “உங்களுடைய தியாக தீர்மானம் எங்களையும் சேர்த்துப் பலியாக்கிவிட்டதே” என்ற பிள்ளைகளின் புலம்பலின் கீதங்கள் அநேகரை பெலனற்றுப் போகச் செய்துவிட்டது. கல்வியினிமித்தம் பெற்றோரைப் பிரிந்திருக்கிற சிறுபிள்ளைகளின் மனநிலை மற்றொரு போராட்டத்தை உண்டாக்கி விடுகிறது. இப்படிப்பட்ட அநேக போராட்டங்களை அவர்கள் மற்றவர்களிடம் அதிகம் பகிர்ந்து கொள்வதில்லை. இதனை அறிய வாஞ்சிப்போரும் குறைவு. சில காரியங்களை உங்களோடு பகிர்ந்து கொண்டேன் ஜெபிக்கவும், செயல்படவும் இது உதவும் என நம்புகிறேன்.